**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்.**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக் ஷா, B.B.A.,LL.B (Hons).,**
**நீதித்துறை நடுவர் சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஜுலை மாதம் 20 ஆம் நாள் திங்கட்கிழமை**
**Crl.M.P.No.714/2026**
*********

அந்தோணி பாஸ்கர் (வயது 49/26),
த/பெ. மிக்கேல் நாடார்,
5/231, வடக்குதெரு, சவேரியார்நகர்,
உசரத்துக்குடியிருப்பு. ...மனுதாரர்/உரிமையாளர்/3 ஆவது நபர்

...எதிர்...

**<u>அரசுக்காக :-</u>**
காவல் உதவி ஆய்வாளர்,
தட்டார்மடம் காவல் நிலையம்,
குற்ற எண். 212/2026. ...எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இ.கு.பா.ச. பிரிவு 497 இன் கீழ் வழக்கு சொத்தை இடைக்கால பராமரிப்புக்காக கொடுக்கக்கேட்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
மனுதாரர் வழக்கறிஞர் : திரு. C. செல்வமகாராஜா
எதிர்மனுதாரர் வழக்கறிஞர் : திருமதி. ப்ரீத்திராணி., அரசு உதவி வழக்கறிஞர்.

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர்/வாகன உரிமையாளர்/3 ஆவது நபர், அவருக்கு சொந்தமான AZUREBLUE என்ற நிறம் கொண்ட TN 74 AQ 7750 என்ற பதிவெண் கொண்ட TATA ACE FACELIFT HT BS IV நான்கு சக்கர வாகனத்தை, எதிர்மனுதாரர் காவல்நிலைய குற்ற எண்.212/2026, பாரதிய நீதிச்சட்டம் பிரிவு 303(2) இன் கீழான வழக்கில் எதிர்மனுதாரர் காவல்நிலையத்தால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், மேற்படி வாகனத்தை குற்றமுறையீட்டாளர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றும், அவருக்கு சொந்தமான நான்கு சக்கர வாகனத்தை ஓட்டுநரை வேலைக்கு அமர்த்தி தொழில் செய்து வந்தார் என்றும், அந்த வாகனத்தை அவருடைய உறவினரான வழக்கின் எதிரி வசந்த் என்பவரிடம் வாடகைக்கு ஓட்டிச் செல்ல அனுமதித்திருந்தார் என்றும், ஆனால் எதிரி வாகனத்தை பயன்படுத்தி திருட்டு குற்றத்தில் ஈடபட்ட காரணத்தினால் மேற்படி வாகனத்தின் மீது குற்ற முறையீட்டாளரால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி வாகனம் காவல்நிலையத்தில் திறந்த வெளியில் நிறுத்தப்பட்டு மழையிலும் வெயிலிலும் கிடப்பதால் அதன் பயன்பாட்டு தன்மை மிகவும் பாதிக்ககூடிய அளவில் ஆகிவிடும் என்றும், இதனால் மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், வாகனமானது மனுதாரருக்கு அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என்றும், வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில், வாகனத்தை விற்பனை செய்யவோ, உருமாற்றம் செய்யவோ அல்லது வேறு எந்த வில்லங்கத்திற்கும் உட்படுத்தவோ மாட்டேன் என்றும், நீதிமன்றம் உத்தரவிட்டால் உடனடியாக நீதிமன்றத்தில் மேற்படி வானகத்தை ஆஜர் செய்ய தயாராக இருப்பதாகவும் கூறி, மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**2.** இந்த வழக்கின் சொத்தான AZUREBLUE என்ற நிறம் கொண்ட TN 74 AQ 7750 என்ற பதிவெண் கொண்ட TATA ACE FACELIFT HT BS IV நான்கு சக்கர வாகனத்தை, அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்தால், அவர் அதனை விற்கவோ அல்லது

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.20 15:24:41 +0530

அழிக்கவோ அல்லது உருமாற்றம் செய்யவோ வாய்ப்புள்ளது என்றும், வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைத்தால் வாகனத்தை பயன்படுத்தி மீண்டும் குற்றசெயலில் ஈடுபடக்கூடும் என்றும், மேலும் அவர் வழக்கின் சொத்தினை வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யமாட்டார் என்றும் கூறி, எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது.

3. இருதரப்பிலும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள AZUREBLUE என்ற நிறம் கொண்ட TN 74 AQ 7750 என்ற பதிவெண் கொண்ட TATA ACE FACELIFT HT BS IV நான்கு சக்கர வாகனத்தின் ஆர்.சி புத்தகத்தின் நகலினை பரிசீலனை செய்யும்போது, வாகனத்தின் உரிமையாளராக சேகர் ராஜா ஜெனிபர் என்பவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் இம்மனுவின் மனுதாரரான அந்தோணி பாஸ்கருக்கு வாகனத்தை கொடுப்பதில் சேகர் ராஜா ஜெனிபருக்கு ஆட்சேபனை ஏதும் இருந்தால் 14.07.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன் படி சேகர் ராஜா ஜெனிபர் என்பவர் அன்றைய தினம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சத்திய பிரமாண வாக்குமூலம் அளித்தார்.

4. சத்திய பிரமாண வாக்குமூலத்தை பரிசீலனை செய்யும்போது, AZUREBLUE என்ற நிறம் கொண்ட TN 74 AQ 7750 என்ற பதிவெண் கொண்ட TATA ACE FACELIFT HT BS IV நான்கு சக்கர வாகனத்தின் உரிமையாளர் என்றும், அவர் மேற்படி வாகனத்தை அந்தோணி பாஸ்கர் (இம்மனுவின் மனுதாரர்) என்பவருக்கு வாடகைக்கு ஓட்டுவதற்காக அனுமதித்திருந்தார் என்றும், மேற்படி வாகனத்தை ஓட்டுநரை வேலைக்கு அமர்த்தி தொழில் செய்து வந்தார் என்றும், அந்த வாகனத்தை இம்மனுவின் மனுதாரர் அவருக்கு தெரிந்த நபரான வழக்கின் எதிரி வசந்த் என்பவரிடம் வாடகைக்கு ஓட்டிச் செல்ல அனுமதித்தார் என்றும், ஆனால் எதிரி வசந்த் திருட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தியதால் வாகனம் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், வாகனம் மழையிலும், வெயிலிலும் நிற்பதால் பழுதாகக் கூடும் என்றும், அந்த வாகனத்தை பயன்படுத்தி தான் அவர் வாழ்வாதாரம் செய்து வருகிறார் என்றும், எனவே அவருக்கு சொந்தமான AZUREBLUE என்ற நிறம் கொண்ட TN 74 AQ 7750 என்ற பதிவெண் கொண்ட TATA ACE FACELIFT HT BS IV நான்கு சக்கர வாகனத்தினை தட்டார்மடம் காவல்நிலையத்தில் இருந்து நீதிமன்ற காவலுக்கு ஒப்படைக்க உத்தரவிடும்படியும், அதன் உரிமையாளரான அவருக்கு இந்த வழக்கு முடியும் வரை இடைக்காலமாக ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்கும் படி வாக்குமூலம் அளித்துள்ளது புலப்படுகிறது.

மேற்கண்ட வாக்குமூலத்தை பரிசீலனை செய்யும்போது, சேகர் ராஜா ஜெனிபர் வாகனத்தை அவர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க வேண்டும் என கோருகிறார். இந்நிலையில் இம்மனுவின் மனுதாரரின் பெயரில் இல்லாத வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைப்பது நீதியின் பால் சரியானதாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்து மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவில், மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.20 15:24:45 +0530

இந்த உத்தரவு, என்னால் இன்று 20.07.2026 ஆம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.20 15:24:48 +0530

நீதித்துறை நடுவர்
சாத்தான்குளம்

Visit **ecourts.gov.in** for updates or download mobile app “**eCourts Services**” from Android or iOS